# முசலி பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 11 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜுன் 05 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ் அறிக்கையில் உள்ள எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முசலி பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான த்க்கம் | சொத்துக்கள் | | செலவினங்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
| அதிகரித்துக் கூறல்கள் | 02 | 3,792,296 | 01 | 427,392 |

### 1.3.2 கணக்காய்வுக்குச் சான்றுகள் இன்மை

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 6,556,838 பெறுமதியுடைய 03 மீதிகளை கணக்காய்வின்போது சான்றுறுதிப் படுத்தமுடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம்ை IX விதி இல 180 இன் படி காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் III பிரிவு 81 ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகள் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணங்களில் மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தவறியமை.

(இ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் VII பிரிவு 166 பிரதான பேரேட்டிற் பதிதற் பொருட்டு குறிப்புப் புத்தகம் ஒன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்தப்பட வேண்டிய, பெற வேண்டிய கணக்குகள்

1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 வரையான காலப் பகுதியில் ரூபா 533,031 பெறுமதியான முற்பண மீதிகள் தீர்வு செய்யப்படாமல் காணப்படுவதுடன் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.5 தீர்வு செய்யப்படாத முற்பணக் கணக்கு

சபையின் அலுவலகர் ஒருவருக்கு வாகனத் திருத்தம் தொடர்பில் வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 100,000 இதுவரைக்கும் சீர் செய்யப்படாததுடன் முற்பணக் கணக்கில் எந்த ஒரு பதிவுகளும் இடம்பெறவில்லை.

### 1.3.6 காலங் கடந்த வைப்புகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முசலிப் பிரதேச சபையின் வைப்புப்பணப் பேரேட்டைக் கணக்காய்விற்குட்படுத்திய போது அரசிறை வைப்புக் கணக்கு மாத்திரமே பேணப்பட்டதுடன் ஏனைய வைப்புக் கணக்குகள் பராமரிக்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) காலங் கடந்த அரசிறை வைப்புகள் ரூபா 23,000 நிதிப் பிரமாணம் 571 (2) இன் படி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**1.7 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்**

பதவியினர் கடன் நிலுவைகள் ரூபா 45,794 நீண்ட காலமாக அறவிடப்படாமல் உள்ளதுடன் இது தொடர்பாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.8 புத்தகங்கள், ஏடுகள் பராமரிக்கப்படாமை**

(அ) பிரதான பேரேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனக் கொளவனவு பரீட்சை மீதியில் ரூபா 43,975,000 எனவும் புத்தகங்களில் ரூபா 32,856,568 எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 13,190,818 ஆக விளைந்திருப்பதுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாடு செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 1,916,760 ஆகவும் விளைந்திருந்தது.

**2.2 நிதி முகாமைத்துவம்**

(அ) வரவுசெலவுத் திட்டம் சரியான முறையில் வகுக்கப்படாமையினால் செலவினங்களில் மிகையும் சேமிப்பும் வருமானங்களின் பற்றாக்குறையும் மேலதிகமும் ஏற்பட்டுள்ளன.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1** மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளவாறான வருமானம் மற்றும் வருமான நிலுவை

பிரதேச சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் வருமான நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| (i) | வாடகைகள் | 2,000,000 | 1,562,670 | - |
| (ii) | உரிமங்கள் | 310,000 | 940,550 | - |
| (iii) | ஏனைய வருமானங்கள் | 10,717,000 | 8,653,474 | 171,344 |

## 2.4 சொத்து முகாமைத்துவம்

**செயற்பாடற்ற மற்றும் குறைவான பாவனையுள்ள பௌதீக இருப்புகள்**

பின்வரும் சொத்துக்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

| | வாகன இலக்கம் | வாகன வகை | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|---|
| (i) | RB 9077 | உழவு இயந்திரம் | 02 வருடம் |
| (ii) | 3191 | கொம்பைன் ஹார்வெஸ்டர் | 02 வருடம் |
| (iii) | - | கொங்ரீட் மிக்சர் | 02 வருடம் |

## 2.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) குறிப்பிடப்பட்ட நிறுவனத்திடமிருந்து ரூபா 850,000 க்கு உழவு இயந்திரப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதும் கொடுப்பனவானது இரு தனி நபர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபை நடவடிக்கைகள் சம்பந்தமாக போதுமானளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துகள்

(இ) கணக்கீடு

(ஈ) ஆளணி

(உ) நன்கொடை

(ஊ) வாகனங்களின் பயன்பாடு

(எ) நானாவித வைப்புகள்

(ஏ) வரவுசெலவுத் திட்டம்